# உங்களது TraceTogether செயலியை அண்மைப் பதிப்புக்குப் புதுப்பித்திடுங்கள்!

## உங்கள் அன்புக்குரியவர்களை தொடர்ந்து பாதுகாப்பாக வைத்திருக்க இந்த வழிமுறைகளைப் பின்பற்றவும்.




1. **தற்போதுள்ள TraceTogether செயலியைச் செயல்படுத்துங்கள்.**

   புதுப்பிக்க நினைவூட்டும் தகவல் தோன்றும். தொடர்வதற்கு **"Update" தேர்ந்தெடுங்கள்.**




2. **செயலி புதுப்பிக்கப்பட்டுவிட்டது!**

   இந்தச் செயலி இப்போது இன்னும் பல மொழிகளில், கூடுதல் இயக்கங்களுடன் கிடைக்கிறது. தொடர்வதற்கு **"Start set up"** தேர்ந்தெடுங்கள்.




3. **மொழியை மாற்றுங்கள்.**

   நீங்கள் விரும்பும் மொழியைப் பட்டியலிலிருந்து தேர்ந்தெடுங்கள்.




4. **உங்கள் சுயவிவரத்தைத் தேர்ந்தெடுத்து, உங்களது அடையாள அட்டை/FIN விவரங்களை உள்ளிடுங்கள்.**

   சுகாதார அமைச்சு உங்களுடன் தொடர்பு கொள்ள வேண்டியிருக்கும் போது, **உங்கள் அடையாளத்தை விரைவாக உறுதிப்படுத்த** இது உதவும்.




5. **உங்கள் செயலி செயல்படத் தொடங்கிவிட்டது!**

உங்கள் ஊடலைத் (Bluetooth) தகவல் உங்கள் தொலைபேசியில் பாதுகாப்பாக இருக்கும், மேலும் உங்களுக்கு கோவிட்-19 கிருமி தொற்று இருப்பது உறுதிப்படுத்தப்பட்டால் மட்டுமே அத்தகவல் சுகாதார அமைச்சுடன் பகிரப்படும். 25 நாட்களுக்குப் பிறகு உங்கள் தொலைபேசியில் இருக்கும் ஊடலைத் (Bluetooth) தகவல் தானாகவே நீக்கப்படும்.

**TraceTogether, தற்காப்போம் 🇸🇬**

# TraceTogether பயன்படுத்தி உங்களையும் உங்கள் அன்புக்குரியவர்களையும் பாதுகாத்திடுக

நீங்கள் கோவிட்-19 நோயால் பாதிக்கப்பட்டிருந்தால், உங்களை விரைவாக தொடர்புக்கொள்ளவும், அடுத்த கட்ட நடவடிக்கைகளுக்கு வழிகாட்டவும், **TraceTogether** செயலி உதவுகிறது.

1. இந்த **QR குறியீட்டை** வருடுங்கள், அல்லது செயலியைப் பதிவிறக்க tracetogether.gov.sg- க்குச் செல்லவும்.

   செயலி இப்போது **மேலும் பல மொழிகளில்** கிடைக்கிறது.




2. **செயலியை இயக்கவும்.**

   முதல் சில பக்கங்கள், செயலியைப் பயன்படுத்துவதன் நன்மைகளை விளக்குகின்றன.




3. **உங்கள் கைத்தொலைபேசி எண்ணைப் பதிவு செய்யுங்கள்.**

   குறுந்தகவல் வழியாக உங்களுக்கு அனுப்பப்பட்ட **கடவு எண்ணை உள்ளிடவும்.**




4. **உங்கள் சுயவிவரத்தைத் தேர்ந்தெடுத்து, உங்களது அடையாள அட்டை/FIN விவரங்களை உள்ளிடுங்கள்.**

   **உங்கள் தனிப்பட்ட அடையாள எண்** உங்களுடன் தொடர்பு கொள்ள வேண்டியிருக்கும் போது **சரியான நபரை அடைய உதவுகிறது.**




5. **ஊடலையை (Bluetooth) இயக்கவும்.**

   நீங்கள் கோவிட்-19 நோயால் பாதிக்கப்பட்டிருந்தால் உங்களைத் தொடர்புக் கொள்ள இது வகை செய்கிறது*.




6. **செயலி செயல்படத் தொடங்கிவிட்டது!**

   கிருமி பரவல் முடியும் வரை **உங்கள் செயலியையும் ஊடலையையும் (Bluetooth) இயக்கவும்!**

*உங்கள் ஊடலைத் (Bluetooth) தகவல் உங்கள் தொலைபேசியில் பாதுகாப்பாக இருக்கும், மேலும் உங்களுக்கு கோவிட்-19 கிருமி தொற்று இருப்பது உறுதிப்படுத்தப்பட்டால் மட்டுமே அத்தகவல் சுகாதார அமைச்சுடன் பகிரப்படும். 25 நாட்களுக்குப் பிறகு உங்கள் தொலைபேசியில் இருக்கும் ஊடலைத் (Bluetooth) தகவல் தானாகவே நீக்கப்படும்.

**TraceTogether, தற்காப்போம்**